**2020–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் தேதி வியாழக்கிழமை மாலை 05.00 மணிக்கு கொமாரபாளையம் நகராட்சி சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**

**முன்னிலை:– திரு.சி.ஸ்டான்லி பாபு, இ.கலை., அவர்கள்.**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர்**

**பொருள் எண்.1**

ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் – 2020ம் மாதத்திய நாட்குறிப்பினை கூட்டத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 153 நாள் 30.04.2020
பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் – 2020ம் மாதத்திய நாட்குறிப்பினை கூட்டத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பதிவு செய்யலாம்.
தீர்மானம் எண் 154 நாள் 30.04.2020
பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.3**

பொது சுகாதாரப் பிரிவில் ( Covid-19 ) கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் சப்ளை செய்ய 30.03.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் 01.04.2020 அன்று கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | கிருமி நாசினி / பாதுகாப்பு உபகரணம் பெயர் | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி ( All rate incl GST 12 % ) | ஸ்ரீ அக்சயா டிரேடர்ஸ், திருச்சி ( All rate incl GST 12 % ) | ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேசன், நாமக்கல். ( All rate incl GST 12 % ) |
|---|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு பவுடர் | Rs.**11.50**/ Kg | Rs.**12.50**/ Kg | Rs.**10.98**/ Kg |
| 2 | லைசால் liquid ( 5 % ) | Rs. **205** / Lit | Rs. **210**/ Lit | Rs.**196**/ Lit |
| 3 | Dettol Hand wash Liquid ( 200 ml ) | Rs.130/No | Rs.135/No | Rs.123.20/No |
| 4 | PPE Kit | Rs.1050/No | Rs.1150/No | Rs.980/No |
| 5 | கை கழுவும் சோப் | Rs.12/No | Rs.12.50/No | Rs.11.20/No |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கவும், அவசர அவசியம் கருதி பொது மக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு , ஆணையர் அவர்களின் முன்

அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மேற்படி பொருட்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.3,40,000/-க்கு கூட்டப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

**1)** அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 155 நாள் 30.04.2020

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

கொமாரபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் அதிகம் கூடும் இடங்கள் கண்டறியப்பட்டு அவற்றில் முக்கியமாக பேருந்து நிலையம் நகர்நல மையங்கள், அரசு மருத்துவமனை மற்றும் நகரின் முக்கிய சாலைகளில் கொரோனா தொற்று ஏற்படாதவாறு அனைத்து இடங்களையும் தூய்மைபடுத்தி தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது. இதில் Sodium Hypo Chloride திரவத்தினை தண்ணீர் கலந்து மேற்கண்ட அனைத்து பகுதிகளிலும் அடிக்க Sodium Hypo Chloride 3500 (திரவம்) லிட்டர் வாங்கவும் மேற்படி திரவத்தை அவ்வப்போது தேவைக்கேற்ப பயன்படுத்தி கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.70,000/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் குறித்து நோய் தொற்று பரவாமல் தடுக்க மேற்கண்ட பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ள – ஆம் தேதி அன்று விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்கண்ட விபரபடிக்கு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதையும் தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் தெரிவிக்கப்படுகிறது.

(i) M/s. கோல்டன் கெமிக்கல்ஸ் ஈரோடு ரூ.19.47/ 1 லிட்டர்
(ii) M/s. சாய்ராம் கெமிக்கல்ஸ் கோவை ரூ.19.47/ 1 லிட்டர்
(iii) M/s. சண்முகா சால்ட் & கெமிக்கல்ஸ் ஈரோடு ரூ.19.47/ 1 லிட்டர்

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட பணிக்கான உத்தேச செலவினம் ரூ.70,000/–
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக பணியினை செய்ய வேண்டிள்ளதால் நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 – ன் கீழ் பணியினை மேற்கொள்ளவும். பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.1 ல் கண்டுள்ள M/s. கோல்டன் கெமிக்கல்ஸ் ஈரோடு என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 156 நாள் 30.04.2020

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

கொமாரபாளையம் நகராட்சி பகுதியில் தற்போது கொரோனா நோய் தடுப்பு Covid -19 நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியை பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பாக சமூக இடைவெளி விட்டு காய்கள் வாங்க நகராட்சி பகுதியில் இங்கு வரும் தினசரி மார்க்கெட்டை பேருந்து நிலையத்திற்கு தற்காலிகமாக மாற்ற ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததின்படி பேருந்து நிலையத்தில் தினசரி மார்க்கெட் கடைகள் வைக்க பெயிண்டில் தடுப்பு மார்க்கிங் செய்வதற்கும் சமூக இடைவெளியில் நிற்க ஒரு மீட்டர் இடைவெளி விட்டு பெயிண்ட் மார்க்கிங் வட்டம் அமைக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்கண்ட பணி பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பான பணியாக இருப்பதால் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருவதாலும் மேற்கண்ட பணிகளை உடனடியாக

மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படிக்கு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதை மக்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

( a ) கடைகள் பெயிண்ட் மார்க் மற்றும் சமூக இடைவெளி வட்டம் அமைத்து மார்க் செய்தல் பணி.

1. திரு. P. சின்ன்ண்ணன் கொமாரபாளையம் ரூ. 24,954/—
2. திரு. K.S. மாரியப்பன் பவானி ரூ. 25,156/—
3. திரு. S.A. சக்கரபாணி & சன்ஸ் பவானி ரூ. 25677/—

( b) பேருந்து நிலையில் உள்ள ஒரு வலிபாதையை மாற்றப் பேருந்து நிலையத்தின் அமைத்து தடவழிகளுக்குள் தடுப்பு பணி (163.80x2.10 உயரம்) அமைத்தல்.

1. திரு. P. சின்ன்ண்ணன் கொமாரபாளையம் ரூ. 49,877/—
2. திரு. K.S. மாரியப்பன் பவானி ரூ. 50,186/—
3. திரு. S.A. சக்கரபாணி & சன்ஸ் பவானி ரூ. 50675/—

**அலுவலக குறிப்பு :**

1. மேற்கண்ட பணிகான உத்தேச செலவினம் ரூ.75,000/- க்கு அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணியினை பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பான பணியில் இருப்பதால். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக பணியினை செய்ய வேண்டியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு பணிக்கான விலைப்புள்ளியிலும் வ.எண். 1 ல் கண்டுள்ள திரு. P.சின்னண்ணன் என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்கிமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 157 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை சுத்திகரிப்பு நீரேற்று நிலையத்தில் ஒரு 100 HP மின் மோட்டார் மற்றும் ஒரு 50 HP நீர்மூழ்கி மின் மோட்டார் ஆகியவற்றை கொண்டு, நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 8 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், இம்மோட்டார்களை இயக்குவதற்கு பயன்படுத்தப்படும் Vaccum Motor திடீரென பழுதடைந்த காரணத்தினால், மேற்சொன்ன மோட்டார்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. பழுதடைந்த மோட்டாருக்கு Stand by மோட்டார் இல்லாத காரணத்தினால் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. எனவே, பழுதடைந்த Vaccum Motor-னை கழற்றி பரிசோதித்ததில் அதன் காயில் உயர் மின் அழுத்தம் காரணமாக எரிந்த நிலையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக பழுதினை சரி செய்தால் மட்டுமே குடிநீர் சீர் செய்யப்படும் நிலை உள்ளதால், பழுதினை சரி செய்வதுடன், புதியதாக Vaccum Motor ஒன்றினை வாங்கி Stand by மோட்டாராக வைத்துக் கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,80,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.4,80,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 158 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 3336/J2/2020 நாள். 24.03.2020இல் கொமாரபாளையம் நகராட்சியில் ( Covid-19) கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிக்கு தேவையான கிருமி நாசினிகள், எந்திரங்கள், பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்து

கொள்ள ரூ.3,50,000/- நிதியானது State Disaster Response fund (SDRF) நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண். 3336/ஏ2/2020-13 நாள். 09.04.2020 அன்று SDRF நிதியிலிருந்து ரூ.1800000/ - ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது கொரோனா வைரஸ் அனைத்து பகுதிகளிலும் வேகமாக பரவி வருவதால் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான கிருமி நாசினிகள், கையுறை, முகவுறை, தளவாட பொருட்கள், துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், கிருமி நாசினி தெளிப்பு எந்திரங்கள் போன்றவை ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய கூடுதல் காலம் ஆவதால், தற்போது கொரோனா வைரஸ் பரவுதல் கொள்ளை நோய் என அறிவித்து இருப்பதால், அவசர அவசியம் கருதி போர்கால அடிப்படையில் பணிபுரிய வேண்டிய சூழ்நிலை உள்ளதால், ஒப்பந்தப்புள்ளி கோரி பெறுவதற்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பொருட்கள் விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்து கொள்ளலாம் என கூடுதல் முதன்மைச் செயலர் அவர்களின் கடித ந.க.எண். 74/JS/(MA) / Finance ( Salaries ) /2020 நாள். 01.04.2020இல் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி கடிதத்தில் கோரியபடி கிருமி நாசினிகள் கொள்முதல் செய்து கொள்ளவும், மேற்படி தடுப்பு நடவடிக்கைகளுக்கு SDRF நிதியின் மூலம் வரப்பெற்ற தொகையான ரூ.21,50,000/- யினை தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் , அனுமதிக்கும் மன்றப் பொருள் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 159 நாள் 30.04.2020
அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.8</u>**

பொது சுகாதாரப் பிரிவில் ( Covid-19 ) கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் சப்ளை செய்ய 09.04.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் 11.04.2020 அன்று கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | கிருமி நாசினி / பாதுகாப்பு உபகரணம் பெயர் | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி ( All rate incl GST 12 % ) | ஸ்ரீ அக்சயா டிரேடர்ஸ், திருச்சி ( All rate incl GST 12 % ) | ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேசன், நாமக்கல். ( All rate incl GST 12 % ) |
|---|---|---|---|---|
| 1 | லைசால் liquid ( 5 % ) | Rs. 205 / Lit | Rs. 210/ Lit | Rs.196/ Lit |
| 2 | Hand Sanitizer | Rs.1600/ Lit | Rs.1860/ Lit | Rs.1512/Lit |
| 3 | கை கழுவும் சோப் (125 கிராம்) | Rs.35/No | Rs.39/No | Rs.33.60/No |
| 4 | Dettol Hand wash Liquid ( 200 ml ) | Rs.130/No | Rs.135/No | Rs.123.20/No |
| 5 | PPE Kit | Rs.1050/No | Rs.1150/No | Rs.980/No |
| 6 | Reusable Gloves | Rs.174/No | Rs.16.50/No | Rs.154.56/No |
| 7 | Surgical Gloves (100 Nos) | Rs.15.50/No | Rs.16.50/No | Rs.14.56/No |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கவும், அவசர அவசியம் கருதி பொது மக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு , ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மேற்படி பொருட்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.625240/-க்கு கூட்டப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் **160** நாள் **30.04.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.9</u>**

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான Mist Power Sprayer, Mini Sprayer மற்றும் Cotton Synthetic gloves கொள்முதல் செய்து கொள்ள **09.04.2020** அன்று திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிட் என்ற அரசு நிறுவனத்திற்கு விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு **11.04.2020** அன்று விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பாதுகாப்பு உபகரணம் / கிருமி நாசினி தெளிப்பு எந்திரம் | எண்ணிக்கை | விலை ரூபாய் ( GST 12 % உள்பட ) |
|---|---|---|---|
| **1** | Mist Blower Turblow 2020 Power Sprayer ( 13 லி கொள்ளளவு ) | **1** | **ரூ. 13500.00** |
| **2** | Kisan Kraft 2 litre Mini Sprayer | **1** | **ரூ. 370.00** |
| **3** | Hand Gloves Synthetic cotton | **1** | **ரூ. 155.00** |

மேற்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை ஏற்று அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த ஆணையர் அவர்களின் முன் அனுமதியினை பெற்று, மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும், மேலும் அதற்காகும் செலவினம் ரூ.101482/-க்கும் கூட்டப் பொருள் ஒப்புதலுக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் **161** நாள் **30.04.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.10</u>**

இந்நகராட்சியின் அம்மா உணவகம் பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது கொரோனா நோய் தொற்று காரணமாக தமிழகம் முழுவதும் முழு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சியின் அம்மா உணவகத்தில் மூன்று வேலையிலும் உணவுக்காக வருபவர்களுக்கு அனைவருக்கும் உணவு வழங்க வேண்டும் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி அம்மா உணவகத்தில் உணவருந்துவோர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அம்மா உணவகத்தில் உணவருந்தும் அறை சிறிய அளவில் உள்ளதால் சமூக இடைவெளி விட்டு உணவருந்துவதற்கு சிரமமாக உள்ளதாலும், காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, பொது மக்களின் நலன் கருதி அம்மா உணவகத்தின் முன்புறம் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை எதிர்புறம் உள்ள இடத்தில் மாற்றியமைத்து அம்மா உணவகத்தில் உள்ள சிறிய உணவருந்தும் அறையை முன்புறம் விரிவாக்கம் செய்யுமாறு மாண்புமிகு தமிழக மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். அதன்படி அவர்கள் அம்மா உணவகத்தின் உணவருந்தும் அறையை விரிவாக்கம் செய்ய தெரிவித்ததின்படி இப்பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.17,70,000/—க்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.17,70,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் **162** நாள் **30.04.2020**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

கொமாரபாளையம் நகராட்சி அலுவலகத்தில் மின்தடை ஏற்படும்பொழுது பயன்படுத்தப்படும் Inventor மற்றும் பேட்டரிகள் பழுதடைந்த காரணத்தினால், அலுவலக வளாகத்தில் மின்தடையின்பொழுது கனிணிகளை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. மேலும், தற்போது கொரோணா வைரஸ் தொற்று அபாயம் காரணமாக ஊரடங்கு அமலில் உள்ளதால், அம்மா உணவகத்தில் மூன்று வேலையும் உணவு தயாரித்து பொது மக்களுக்கு உணவு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, மின்தடை ஏற்படும் பட்சத்தில் உணவு தயாரிக்கும் பணி தடையின்றி நடைபெற ஏதுவாக, அம்மா உணவகத்தில் Inventor மற்றும் பேட்டரி பொருத்துவது அவசியமாகும். மேலும், ஊரடங்கு காரணமாக அம்மா உணவகத்தில், உணவு வாங்கும் மக்களின் சமூக இடைவெளியை பின்பற்றி வரிசையில் வர ஏதுவாக அம்மா உணவம் முன்பு சாமியான பந்தல் அமைத்து பொது மக்கள் நிழலில் நிற்க ஏற்பாடு செய்வதும் அவசியமாகும். ஏனவே, மேற்கொள்ள மூன்று பணிகளையும் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,11,000/— க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், நகராட்சி சட்டம் (1920, பிரிவு (15) — ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ள 13.04.2020 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படிக்கு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனி அலுவரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு. தீபக் கன்ஸ்ட்ரக்சன், கொமாரபாளையம் ரூ. 1,10,000/—
2. திரு. K.S. மாரியப்பன் பவானி ரூ. 1,12,025/—
3. திரு. S.A. சக்கரபாணி & சன்ஸ் பவானி ரூ. 1,13,750/—

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்கண்ட பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,11,000/— க்கு அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பணியினை மேற்கொள்ளவும் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1 ல் கண்டுள்ள M/s. தீபக் கன்ஸ்ட்ரக்சன், கொமாரபாளையம் என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்கிமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 163 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 அய்யம்பாளையம் பகுதியில் ஆழ்துளை கிணறு ஒன்று அமைக்கப்பட்டு கைப்பம்பு பொருத்தி அப்பகுதி மக்களுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் பயன்பாட்டிற்கு இருந்து வந்தது. இந்நிலையில், ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் குறைந்துவிட்டபடியால் கைப்பம்பு உபயோகித்து தண்ணீர் பெறுவது சிரமமாக உள்ளது. எனவே, கைப்பம்பினை அகற்றிவிட்டு நீர்மூழ்கி மின் மின்மோட்டார் இறக்கி புதிதாக கான்கிரீட் Column அமைத்து அதன்மேல் சின்டெக்ஸ் தொட்டி வைத்து தண்ணீர் வசதி செய்து தர தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,20,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3,20,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 164 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 சிவசக்தி நகர், வார்டு எண்.19 காட்டுவலவு, வார்டு எண்.20 பூங்கொடி மில் ரோடு, வார்டு எண்.23 ராஜவிநாயகர் கோவில் வீதி மற்றும் ராஜவிநாயகர் கோவில் குறுக்கு வீதிகள் ஆகிய பகுதிகளில் மின்புதைவட கேபிள்கள் பதிக்கும் பொழுது பழுதடைந்துள்ள PVC பகிர்மானக் குழாய்களை அகற்றிவிட்டு புதியதாக HDPE பகிர்மானக் குழாய்கள் அமைத்து குடிநீர் விநியோகத்தினை சீர் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,50,000/—க்கு கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.9,50,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 165 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 கம்பன் நகர் பகுதியில் (ஒலப்பாளையம்—கம்பன் நகர் சந்திப்பு) அருகே ஓர் ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு மேற்குப்புற வீதிகளுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் வசதி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் கிழக்கு வீதி மற்றும் கம்பன் நகர் குறுக்கு வீதிகளுக்கு மேற்சொன்ன ஆழ்துளை கிணற்றிலிருந்து தண்ணீர் குழாய் நீட்டிப்பு செய்ய அருகிலேயே புதியதாக ஆர்.சி.சி.பில்லர் கட்டி அதன்மேல் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து மேற்சொன்ன இரண்டு வீதிகளுக்கும் குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,80,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 166 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 சுள்ளிமடைத்தோட்டம் பகுதியில் ஒரு பொதுக் கழிப்பிடம் கட்டப்பட்டு, அப்பகுதியில் வசிக்கும் பெண்களுக்கான பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது, இக்கழிப்பிடம் கட்டப்பட்டு 20 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியால் கழிப்பிடத்தின் செப்டிக் டேங்க் மிகவும் பழுதடைந்துள்ளது. இதன் காரணமாக கழிப்பிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் செப்டிக் டேங்க் பழுது காரணமாக நேரடியாக அருகில் உள்ள ஓடையில் கலந்து, அப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் கழிப்பிடம் தற்போது மூடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் கழிப்பிடம் இன்றி பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். எனவே, பழுதடைந்த செப்டிக் டேங்கினை இடித்துவிட்டு புதிய செப்டிக் டேங்க் கட்டி, பழுதடைந்துள்ள தண்ணீர் குழாய்களை மாற்றி கழிப்பிடத்திற்கு வர்ணம் பூச தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,80,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.2,80,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 167 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு உபகரணம் கொள்முதல் செய்ய 16.04.2020இல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளி 18.04.2020 அன்று வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பாதுகாப்பு உபகரணம் பெயர் | Reliant Global green energy & Co. Coimbatore | Shine Traders, Coimbatore | Radiaant Textile Process, Erode |
|---|---|---|---|---|
| 1 | முகவுறை மூன்றடுக்கு உள்ளது. ( Face mask – 3 layer ) | ரூ.15.22 ( Inclusive GST – 5 % ) | ரூ.15.75 ( Inclusive GST – 5 % ) | ரூ.16.27 ( Inclusive GST – 5 % ) |
| 2 | முழு உடல் பாதுகாப்பு உடை ( PPE ) | ரூ.454.65 ( Inclusive GST – 5 % ) | ரூ.458.85 ( Inclusive GST – 5 % ) | ரூ.462.00 ( Inclusive GST – 5 % ) |
| 3 | சர்ஜிகல் கையுறை ( Surgical gloves ) | ரூ.918.40 ( Inclusive GST – 12 % ) | ரூ.929.00 ( Inclusive GST – 12 % ) | ரூ. 929.04 ( Inclusive GST – 12 % ) |

மேற்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதில் குறைவான விலைப்புள்ளிகள் வழங்கியுள்ள Reliant Global green energy & Co என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று, அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்றும், அதற்குண்டான செலவினம் ரூ.182980/- க்கும் கூட்டப் பொருள் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 168 நாள் 30.04.2020
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

இந்நகராட்சியின் வாரச்சந்தை முன்புறம் உள்ள நகராட்சி சமுதாய படிப்பகத்தின் வளாகத்தில் தென்புறம் கீழ்க்கண்ட அளவுகளில் மூன்று அறைகள் படிப்பகத்தால் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

| வ.எண். | அளவுகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 8 x 15 அடி | 2 |
| 2 | 5 x 15 அடி | 1 |
| | மொத்தம் | 3 |

இந்நகராட்சியின் வருவாயினை பெருக்கும் நோக்கில் மேற்கண்ட 3 அறைகளையும் பல்வகை கேட்பு இனத்தில் (Non Tax) சேர்த்தும், 3 அறைகளையும் ஒருங்கினைத்து ஒரே ஏல இனமாக ஏலம் விடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் 169 நாள் 30.04.2020
ஒப்புதல் வழங்கப்பட்டது.

**பொருள் எண்.18**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 31.03.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்–2019–2020** | | | |
| 1. | கொமாரபாளையம் நகராட்சி, வார்டு எண்.5 கம்பன் நகர் பகுதியில் புதிய நியாய விலைக்கடை கட்டுதல். | 12,85,000/– | திரு.பி.முருகன்<br><br>திரு.ஜே.எம்.சண்முகம் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.08 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.47 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.08 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.பி.முருகன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ4/1129/2020 நாள்.13.03.2020ல் மேற்காணும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், மேற்படி செலவினத்தை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்–2019–2020ம் ஆண்டு திட்ட நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 170 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 31.03.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **கல்வி நிதிப் பணி** | | | |
| 1. | அரசு மற்றும் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்ய பணியாளர்களை சப்ளை செய்தல். | 30,50,000/– | திருவாளர்கள். ஆர்.கே.கான்ராக்டர்ஸ், கொமாரபாளையம்.<br><br>திருவாளர்கள். | ஒப்பந்தத் தொகை ரூ.30,13,200/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீசஸ், கொமாரபாளையம். | ஒப்பந்தத் தொகை ரூ.30,32,640/– |

அலுவலகக் குறிப்பு

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட ரூ.30,13,200/– குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். ஆர்.கே.கான்ராக்டர்ஸ், கொமாரபாளையம் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.87 நாள்.28.02.2020 ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் கல்வி நிதியில் செலவு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 171 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

இந்நகராட்சியில் 2019–2020ம் ஆண்டு கணக்குகள் கணினியில் (FAS) தயார் செய்து அதனை உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அவர்களுக்கு அனுப்பவும், மேற்படி பணியினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.64589/2006 நாள்.23.11.2006ல் தெரிவித்துள்ளவாறு வெளி நபர்களை (Out Sourcing) வைத்து உரிய காலத்தில் 2019–2020 ஆம் ஆண்டு கணக்குகளை முடித்து தரும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.125000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 172 நாள் 30.04.2020
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

கொமாரபாளையம் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2020-2021ஆம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் போன்றவைகளை அவ்வப்பொழுது ஈரோடு மாவட்ட பெண்கள் எழுது பொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கம் (லிட்) No.1312 தேவைக்கேற்ப வாங்கிக் கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ.7.00 ( ஏழு ) இலட்சத்திற்கு மட்டும் கூட்டப்பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 173 நாள் 30.04.2020
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.22**

கொமாரபாளையம் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2020-2021ஆம் ஆண்டிற்கு தேவையான கணிணி டோனர்கள், CD, DVD, TVS Catrage Ribbon போன்றவைகளை விலைப்புள்ளி பெற்று அவ்வப்பொழுது தேவைக்கேற்ப வாங்கிக் கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ. 5.00 ( ஐந்து ) இலட்சத்திற்கு மட்டும் கூட்டப்பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 174 நாள் 30.04.2020
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.23**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 17.04.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **பொது நிதிப் பணிகள்** | | | |
| 1. | வார்டு எண்.1 காந்தியடிகள் தெரு பகுதியில் உள்ள IHSDP தொகுப்பு வீடுகளுக்கென்று தனியாக செப்டிக் டேங்க் ஒன்று கட்டி அதன் அருகில் சேதமடைந்துள்ள சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகாலினை இடித்துவிட்டு புதியதாக கட்டும் பணி. | 4,70,000/– | திருமதி.டி.சரஸ்வதி<br><br>திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.15** % குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.05** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.15 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருமதி.டி.சரஸ்வதி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.118 நாள்.30.03.2020 ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 175 நாள் 30.04.2020
திருமதி. டி. சரஸ்வதி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கப்பட்டது.

**பொருள் எண்.24**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 17.04.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **பொது நிதிப் பணிகள்** | | | |
| 1. | கொமாரபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 ஜம்பு வெங்கு பேக்டரி சாலை, பிரியா டெக்ஸ் தென்புற சாலை | 7,10,000/– | திருவாளர்கள். கலைச்செல்வி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.25** % குறைவு. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ஜம்பு வெங்கு வீடு சாலை), வார்டு எண்.7 சத்தியாபுரி (விநாயகர் கோவில் எதிர்புற சாலை), வார்டு எண்.10 காட்டூர், வார்டு எண்.26 பழைய சவுண்டம்மன் கோவில் வீதி, வார்டு எண்.28 திரு.வி.க. சாலை மற்றும் ராஜா வீதி சந்திப்பு சாலை ஆகிய இடங்களில் பழுதடைந்துள்ள சிறுபாலங்களை இடித்துவிட்டு புதியதாக சிறுபாலங்கள் கட்டும் பணி. | | திரு.சி.லோகநாதன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.83** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.25 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். கலைச்செல்வி கன்ஸ்ட்ரக்சன்ஸ் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.119 நாள்.30.03.2020 ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 176 நாள் 30.04.2020
திருவாளர்கள். கலைச் செல்வி கன்ஸ்ட்ரக்சன்ஸ் என்ற ஒப்பந்ததாரான் ஒப்பந்ப்புள்ளியினை ஏற்கப்பட்டது.

**<u>பொருள் எண்.25</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 17.04.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **கல்வி நிதிப் பணிகள்** | | | |
| 1. | கொமாரபாளையம் நகராட்சிக்குட்பட்ட மேற்கு காலனி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள பழுதடைந்துள்ள பழைய கட்டிடத்தினை இடித்து அகற்றும் பணி. | 1,75,000/— | திரு.கே.எஸ்.மாரியப்பன்<br><br>திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.08** % குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.48** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.08 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.கே.எஸ்.மாரியப்பன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.117 நாள்.30.03.2020 ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 177 நாள் 30.04.2020
திரு. கே. எஸ்.மாரியப்பன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கப்பட்டது.

**<u>பொருள் எண்.26</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 29.04.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | <u>குடிநீர் நிதிப் பணிகள்</u> | | | |
| 1. | சுத்திகரிக்கப்படாத தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 20 HP டர்பைன் மோட்டார் பம்ப் செட்டினை பழுது பார்க்கும் பணி. | 2,40,000/– | திரு.கே.தனபாலன்<br><br>திரு.கே.எஸ்.மாரியப்பன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.07 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.45 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.07 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.கே.தனபாலன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.132 நாள்.30.03.2020 ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 178 நாள் 30.04.2020
திரு. கே. தனபாலன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கப்பட்டது.

**<u>பொருள் எண்.27</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 29.04.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | <u>குடிநீர் நிதிப் பணிகள்</u> | | | |
| 1. | வார்டு எண்.32 அங்காளம்மன் கோவில் வீதியில் பழுதடைந்த பகிர்மானக் குழாய்களுக்கு பதிலாக 110mm HDPE பகிர்மானக் குழாய், 160mm PVC பகிர்மானக் குழாய் வார்டு எண்.26 ராஜா வீதியில் 160mm PVC பகிர்மானக் குழாய் பதித்தல். | 4,70,000/– | திரு.கே.எஸ்.மாரியப்பன்<br><br>திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.22 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.11 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.22 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.கே.எஸ்.மாரியப்பன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.133 நாள்.30.03.2020 ஒப்புதல்

பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 179 நாள் 30.04.2020

திரு.கே.எஸ்.மாரியப்பன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கப்பட்டது.

**பொருள் எண்.28**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 29.04.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **குடிநீர் நிதிப் பணிகள்** | | | |
| 1. | வார்டு எண்.3 ஆடுவதைக் கூடம், நகராட்சி பூங்கா, வார்டு எண்.19 மணிமேகலைத் தெரு, வார்டு எண்.31 குள்ளங்காடு, வார்டு எண்.33 மேல்காடு பகுதிகளில் பழுதடைந்துள்ள 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 5 Sintex தொட்டிகளுக்கு பதிலாக புதியதாக Sintex Tank–கள் மற்றும் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 Sintex Tankகள் சப்ளை செய்யும் பணி. | 1,45,000/– | திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்<br><br>திரு.கே.எஸ்.மாரியப்பன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.07 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.34 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.07 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.134 நாள்.30.03.2020 ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 180 நாள் 30.04.2020

திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட்சன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கப்பட்டது.

**பொருள் எண்.29**

இந்நகராட்சிக்கு சொந்தமான 5.00 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி ஒன்று சுந்தரம் காலனி பகுதியில் கட்டப்பட்டு அப்பகுதி பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்சொன்ன நீர்தேக்கத் தொட்டியினை சுத்தம் செய்ய தொட்டியில் உள்ள மீதமுள்ள நீரை Scour செய்யும் பொழுது, முறையான வடிகால் இல்லாத காரணத்தினால் நீர்தேக்கத் தொட்டி வளாகம் முழுவதும் தண்ணீர் தேங்கி விடுகிறது. மேலும், அருகில் உள்ள குடியிருப்புகளுக்குள்ளும் தண்ணீர் புகுந்து வருவதால் அங்கு குடியிருக்கும் மக்கள் இது தொடர்பாக புகார் அளித்த வண்ணம் உள்ளனர். மேலும், நீர்தேக்கத் தொட்டி வளாகத்தினுள் IUDM திட்டத்தின்பொழுது குடிநீர் பிரதானக் குழாய் மாற்றிய பொழுது, அதற்காக பறிக்கப்பட்ட இடம் முழுவதும் குண்டும் குழியுமாக உள்ளது. எனவே, வளாகத்தினுள் புதிதாக வடிகால் கட்டி, வளாகம் முழுவதும் கான்கிரீட் தளம் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5,70,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.5,70,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ர்மானம் எண் 181 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.30**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பெராந்தர்காடு பகுதியில் மோட்டார் அறையுடன் கான்கிரீட் மேல்நிலை நீர்தேக்கத் கட்டப்பட்டு சுமார் 25 வருடங்களுக்கு மேலாகிவிட்டதினால், மேற்சொன்ன மோட்டார் அறை மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. இதன் காரணமாக அப்பகுதி மக்களுக்கு ஏதேனும் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, பழுதடைந்துள்ள மோட்டார் அறையுடன் கூடிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியினை இடித்துவிட்டு புதியதாக ஆர்.சி.சி.பில்லர் கட்டி அதன்மேல் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து பொது மக்களுக்கு தண்ணீர் வசதி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3.10 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3.10 இலட்சத்திற்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 182 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.31**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 ராஜாஜி குப்பம் பகுதியில் மோட்டார் அறையுடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டி அமைக்கப்பட்டு சுமார் 25 வருடங்களுக்கு மேலாகிவிட்டதினால், மேற்சொன்ன மோட்டார் அறை மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. இதன் காரணமாக அப்பகுதி மக்களுக்கு ஏதேனும் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, பழுதடைந்துள்ள மோட்டார் அறையினை இடித்துவிட்டு புதியதாக ஆர்.சி.சி.பில்லர் கட்டி அதன்மேல் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து பொது மக்களுக்கு தண்ணீர் வசதி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3.10 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3.10 இலட்சத்திற்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 183 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.32**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 மேல்நிலை பள்ளி சாலை விநாயகர் கோவில் தெற்கு பகுதியில் உள்ள சிறுபாலம் பழுது ஏற்பட்டுள்ளது. மற்றும் வார்டு எண்.24 நகராட்சி அண்ணா திருமண மண்டபம் சாலையின் முகப்பில் (விநாயகர் கோவில் அருகில்) உள்ள சிறுபாலம் பழுது ஏற்பட்டுள்ளது.

மேற்படி இரண்டு சிறுபாலங்கள் பழுது ஏற்பட்டுள்ளதால் கழிவுநீர் செல்லாமல் தேங்கி நிற்பதால் பொது மக்களுக்கு சுகாதார கேடுவிளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே, பொது மக்களின் சுகாதார நிலையினை கருத்தில் கொண்டு இரண்டு சிறுபாலங்கள் புதியதாக கட்ட ஆணையாளர் அவர்கள் மற்றும் பொறியாளர் அவர்கள் அறிவுறுத்தியன்படி, மேற்படி இரண்டு பகுதிக்கும் நேரில் சென்று பார்வையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3,90,000/—க்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3,90,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 184 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.33**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.24 மேற்கு காலனி பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பொதுக் கழிப்பிடம் ஒன்று கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் நீண்ட நாட்கள் உபயோகத்தின் காரணமாக கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து அதன் கதவுகள், தண்ணீர் குழாய், பேசின்கள் பழுது ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கழிப்பிடத்தை பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, உடனடியாக கழிப்பிடத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,80,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 185 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.34**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு வாகனங்கள் எண்.TN-34 E-5703 மற்றும் TN-34 R-3431 வாகனங்கள் டிப்பர் மற்றும் டேங்கள் லாரிகளின் மின்கலம் பழுதாகி வாகனத்தை ஸ்டார்ட் செய்ய சிரமமாக உள்ளதாவும், கொரோனா தடுப்பு நடவடிக்கை பணிக்கு இடையூறாக இருப்பதாகவும் மேற்குறிப்பிட்ட இரண்டு வாகனங்களுக்கும் இரண்டு புதிய மின் கலம் வாங்கி தருமாறு இந்நகராட்சி ஓட்டுநர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட இரண்டு வாகனங்களுக்கும் புதிய மின்கலம் வாங்க ஆகும் செலவினத் தொகை ரூ.20,000/—க்கு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட வாகனத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணியினை உடனடியாக மேற்கொள்ளவும், கொரோனா Covid-19 நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைக்கு பணிக்கு வாகனத்தின் அவசியம் குறித்து உள்ளூர் நிறுவனத்தாரிடம் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 186 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.35</u>**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு வாகனங்கள் TN-34 E-5703 மற்றும் TN-34 R-3431 டிப்பர் மற்றும் டேங்கர் லாரிகளுக்கு புதிய மின் கலம் வாங்கி பொருத்தும் பணியை மேற்கொள்ள 15.4.2020 ஆம் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் கீழ்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | M/s.SHRII BHARANI ENTERPRISES,<br>104/4, New Pallipalayam Road, Opp. Pambhu puthu,<br>Komarapalayam. | (i) TN-34 E-5703 NT900-12V – 1 No.<br>(ii) TN-34 R-3431 TRA600-12V – 1 No. | 19500/– |
| 2. | M/s.Murugan Agency,<br>250-C, Salem Main Road,<br>Near Rajam Theatre,<br>Komarapalayam. | (i) TN-34 E-5703 NT900-12V – 1 No.<br>(ii) TN-34 R-3431 TRA600-12V – 1 No. | 21464/– |

அலுவலக குறிப்பு

1. மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள M/s.SHRII BHARANI ENTERPRISES, Komarapalayam என்பவரின் விலை விபரமானது மற்ற நிறுவனத்தாரின் விலையினைவிட குறைவாக இருப்பதால் மேற்படியாரின் விலை விபரத்தை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வுழங்கியமைக்கும், அதற்காகும் செலவினத்தை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட இரண்டு வாகனங்களும் கொரோனா Covid-19 நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை பணிக்கு முக்கியமாக தேவைப்படுவதால் பணியினை உடனடியாக மேற்கொண்டமைக்கும் அதற்கும் செலவினத் தொகை ரூ.19,500/–ஐ M/s.SHRII BHARANI ENTERPRISES, Komarapalayam என்பவருக்கு வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 187 நாள் 30.04.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.36</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 136 நிரந்தர துப்புரவுப்பணியாளர்கள் மற்றும் 65 ஒப்பந்த தூய்மைப்பணியாளர்கள் மற்றும் 40 டி.பி.சி. பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி பணியாளர்கள் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபடும்போது தகுந்த பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்து கொண்டு மட்டுமே பணிபுரிய வேண்டும் எனவும், அப்பணியாளர்களுக்கு நகராட்சியின் மூலமாக வழங்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 5437/ஜே2/2020–15 நாள். 17.04.2020 என்ற கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார பணியாளர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி பாதுகாப்பு உபகரணங்களான Reusable Hand Gloves, Reflect Jacket மற்றும் Mouth Mask ISI போன்ற உபகரணங்கள் தமிழ்நாடு அரசு நிறுவனமான SIDCO , சென்னை நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று நேரடியாக கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/ க்கு அவசர அவசியம் கருதி போர்கால அடிப்படையில் பணிபுரியவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920பிரிவு 15ன் கீழ் செலவினம் மேற்கொள்ளவும் , ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கும் கூட்டப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 188 நாள் 30.04.2020
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.37</u>**

குமாரபாளையம் நகராட்சியில் உள்ள பொறியியல் பிரிவில் இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனங்கள் மற்றும் துஊக்ஷ வாகனத்திற்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கான டீசல் மற்றும் ஆயில் உபயோகப்படுத்தப்படுவதற்கான செலவினங்கள் தொகை ரூ.12,00,000/–க்க ஆணையாளர் அவர்களுக்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 189 நாள் 30.04.2020
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.38</u>**

கொமாரபாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை தெளிக்கும் இயந்திரங்களுக்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கான பெட்ரோல், டீசல் மற்றும் ஆயில் உபயோகப்படுத்தப்படுவதற்கான செலவினங்கள் தொகை ரூ.20,00,000/–க்கு ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 190 நாள் 30.04.2020
அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (மற்றும்)
ஆணையாளர்,
கொமாரபாளையம் நகராட்சி.